කම්කරු හා විදේශ රැකියා අමාත්‍යාංශය

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

MINISTRY OF LABOUR AND FOREIGN EMPLOYMENT



# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# ANNUAL PERFORMANCE REPORT 2023

කම්කරු හා විදේශ රැකියා අමාත්‍යාංශය

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

**Ministry of Labour and Foreign Employment**

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# ஆண்டு முன்னேற்ற அறிக்கை
# Annual Performance Report
# 2023

**II කොටස - දෙමළ භාෂාව**

**பகுதி II - தமிழ் மொழி**

**Section II - Tamil Language**

# கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரின் செய்தி



புதுமையான வேலை கலாசாரமொன்றை உருவாக்குவதனூடாக நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, நிலைபேறாக நிலைநிறுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திலும், நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களிலும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் 2023 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற முன்னேற்றத்தை உள்ளடக்கிய இந்த வெளியீட்டில் எனது செய்தியை பகிர்ந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறைகளின் முன்னேற்றத்திற்கான சட்ட மற்றும் கொள்கைக் கட்டுக்கோப்பை வலுப்படுத்துவதை நோக்கிய குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தில், புதிய வேலைவாய்ப்பு சட்டத்தை வரைதலானது தற்போது அதன் இறுதி நிலையிலுள்ளது. மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் முன்னேற்றத்திற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தை திருத்து வதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன், தொழில் வாய்ப்புக்காக புலம்பெயர்தல் மீதான இலங்கையின் தேசிய கொள்கை மற்றும் செயல் திட்டம் 2023-2027 இனை 2023.10.25 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்த முடிந்தமை அமைச்சின் மிகப்பெரிய சாதனையாகும்.

சமூகப் பாதுகாப்பிற்காக, புதிய சமூகப் பாதுகாப்பு நிதியத்தைத் தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், தொழில் வழங்குநர்களுக்கு மேலதிக செலவுகளை ஏற்படுத்தாது புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேநேரம், குறைந்த சமூக அங்கீகாரமுடைய வேலைகளுக்கு கௌரவத்தையும், சமூக அங்கீகாரத்தையும் ஏற்படுத்துவதற்காக "கரு சரு" நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இன்றைய இளைஞர்களை நாளைய தொழில் அணிக்கு தயார்படுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டில் "சிமார்ட் இளைஞர் மன்றம்" என்ற எண்ணக்கருவினை ஆரம்பிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.
பொதுமக்களுக்கு பயனுறுதிவாய்ந்ததும், வினைத்திறன்மிக்கதுமான சேவையொன்றை வழங்கும் நோக்குடன் உலகளாவிய அண்மைக்கால போக்குகளுக்கேற்ப தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியவற்றால் வழங்கப்படும் சேவைகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கும் தொழில் துறையுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களையும் சேவைகளையும் ஒன்றிணைக்கின்ற தேசிய தொழில் சந்தை தகவல் முறைமையொன்றைத் தாபிப்பதற்கும் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதிமேதகு சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களால் இந்த அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்ட வருடாந்த வெளிநாட்டுப் பண அனுப்பல்களை அதிகரிக்கும் இலக்கு தற்போது எட்டப்பட்டு வருகின்றது. வெளிநாட்டு வேலையாளர் பணஅனுப்பல்களைப் பெற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதற்காக, வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு முழுஅளவிலான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமங்களை வழங்குதல், புலம்பெயர்ந்த வேலையாளர்களுக்கு மேலதிக சுங்கத்தீர்வைக் கொடுப்பனவுகளை வழங்குதல் மற்றும் அவர்கள் அனுப்பும் பணத்தின் அடிப்படையில் சலுகை அடிப்படையிலான கடன் திட்டத்தை அறிமுகப்படுத்துதல் போன்ற அத்தகைய பல நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக, 2022 ஆம் ஆண்டில் 3790 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த அந்நிய செலாவணி கையிருப்பு, 2023 ஆம் ஆண்டில் 58மூ ஆக அதிகரித்து 5970 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

அதேபோன்று, புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நலன்புரி மற்றும் பாதுகாப்புக்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பங்களிப்புடன் வீடமைப்புத் திட்டம், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து புலம்பெயர் வேலையாளர்களின் பிள்ளைகளுக்கு உயர் கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்காக முன்மொழியப்பட்ட திட்டம் போன்ற பல திட்டங்கள், அவர்களது பிள்ளைகளுக்கு பகல் நேர பராமரிப்பு நிலையங்களை தாபித்தல் மற்றும் பிரதேச செயலக மட்டத்தில்

புலம்பெயர் வேலையாளர்கள் சங்கங்களை உருவாக்குதல் போன்றவற்றுக்கான முன்னோடித் திட்டத்தை 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பணியாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும், பாதுகாப்பான வேலை கலாசாரத்தை உருவாக்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கொள்கை திருத்தப்படவுள்ளதுடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தை சர்வதேச மட்டத்திற்கு விரிவுபடுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படு கின்றது.

அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகளை பொதுமக்களுக்கு அவர்களின் சொந்த கிராமங்களில் வழங்கும் நோக்கத்துடன் மாவட்ட மட்டத்தில் “புடுமுஊயுடு குயுஐசு” நடமாடும் சேவைகள் தொடர் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று 10 பிரதான பெறுபேற்று விடயப்பரப்புகளில் எமது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயற்பாடுகளையும் இனங்கண்டு, பொதுமக்களால் எதிர்பார்க்கப்படுகின்ற அரச நடைமுறைகளில் சாதகமான மாற்றத்தைக் கொண்டுவருவதற்குத் தேவையான கொள்கை மாற்றங்களை துரிதமாக மேற்கொள்வதன் மூலம் அபிவிருத்திப் பாதையை அணுகுவதற்குத் தேவையான பணிகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இதற்காக, சர்வதேச தொழில் தாபனம், புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (ஐழுஆ) போன்ற சர்வதேச அமைப்புகளின் வழிகாட்டல், ஒத்துழைப்பு மற்றும் உள்நாட்டில் தொழில்வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களின் ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவை பெறப்படுகின்றன. இந்த முக்கியமான வகிபாகத்தை நிறைவேற்றுவதில் முக்கிய பங்காற்றிய கௌரவ வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திரு ஜகத் புஷ்பகுமார மற்றும் அமைச்சின் செயலாளர் திரு.ஆர். பி.ஏ.விமலவீர உள்ளடங்கலாக ஒட்டுமொத்தப் பணியாட்டொகுதியினருக்கும், அமைச்சுடன் இணைந்த அனைத்து நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளடங்கலாக, பதவிநிலை அலுவலர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மனுஷ நாணாயக்கார (பா.உ.)**
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

# கௌரவ வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சரின் செய்தி



இலங்கை மத்திய வங்கியின் அண்மைய புள்ளிவிபரங்களின்படி, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தம் 5,970 மில்லியன் டொலர் பணம் பெறப்பப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை, 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட 3,790 மில்லியன் டொலர் மொத்த பண அனுப்புகை குறிப்பிடத்தக்கதான 57% அதிகரிப்பைக் குறிக்கின்றது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் இலங்கை வரையறுக்கப்பட்ட தனியார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் மேம்பாட்டிற்காகவும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும், விழிப்புணர்வு பிரச்சாரங்கள், சுயதொழில் முயற்சிகள் மற்றும் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவை புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களினும், அதேபோன்று வெளிநாட்டில் வேலை செய்து இலங்கை திரும்பியவர்களின் பாதுகாப்பையும், நலன்புரியினையும் உறுதிப்படுத்துவதற்காக செயற்படுத்தப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள், புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குதல், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்விக்கான புலமைப் பரிசில்களை வழங்குதல் மற்றும் தொழிற்பயிற்சி வாய்ப்புகளுக்கான பரிந்துரை நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்குவதுடன், இந்த நிகழ்ச்சித்திட்டங்கள், அடிமட்ட நிலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அமைச்சின் கீழுள்ள அபிவிருத்தி அலுவலர்களால் (வெளிநாட்டு வேலைவாய்ப்பு) மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் நிறைவேற்றப்படுகின்றன.

எனது தலைமையின் கீழ், புலம்பெயர் வேலையாளர்களுக்கான அமைச்சின் நிகழ்ச்சித்திட்டங்களின் பயனுறுதியைம், விளைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் மாகாண மட்டத்திலுள்ள அபிவிருத்தி அலுவலர்களுக்கான (வெளிநாட்டு வேலைவாய்ப்பு) முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் எதிர்கால வெற்றியை உறுதிப்படுத்தி, மாகாண மட்டத்தில் தேவையான ஆதரவையும், புதுமையான எண்ணங்களையும் திரட்ட முயற்சிக்கின்றனர். இதுவரை அனைத்து மாகாணங்களுக்குமான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.

கௌரவ அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் கீழ் வருகின்ற நியதிச்சட்ட நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளடங்கலாக அர்ப்பணிப்புள்ள அனைத்து அலுவலர்களுக்கும் அவர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்புகளுக்காக எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஏ.பி.ஜகத் புஸ்பகுமார (பா.உ.)**
வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

## தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுச் செயலாளரின் செய்தி



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு 2023 ஆம் ஆண்டில் அதன் பயனுள்ள பங்களிப்பை எடுத்துக்காட்டும் முன்னேற்ற அறிக்கையை பெருமையுடன் முன்வைப்பதுடன், 2024 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட முயற்சிகளையும் எடுத்தியம்புகின்றது. வேலையாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், வேலை பாதுகாப்பை உறுதிப்படுத்தல், தொழில்துறை அமைதியை உருவாக்குதல் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைக்கு திறமையான வேலையாளர்களை ஈர்த்தல் ஆகியவற்றில் எமது முயற்சிகளை இந்த அறிக்கை விபரிக்கின்றது.

தற்போதைய மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளவும், உழைக்கும் மக்களின் உரிமைகளை உறுதி செய்யவும், தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களில் திருத்தம் செய்கின்ற கணிசமான பணி இலக்கை இந்த அமைச்சு பொறுப்பேற்றுள்ளது. இந்த முயற்சி, இந்த சட்டங்களுக்கு இடையிலான சிக்கல்களை அகற்றி, இலகுபடுத்துவதனூடாகதொடருப்பட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் நன்மைகளை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த முக்கியமான சாதனை 2023 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உழைக்கும் மக்களின் உரிமைகளை உறுதியாக பாதுகாக்கின்ற அதேவேளை, தற்போதுள்ள சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை சமகால தொழில் உலகத்துடன் இணங்கிப்போகும் வகையில் திருத்துவதற்கு அமைச்சு தன்னை அர்ப்பணிக்கின்றது. வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை ஊக்குவிப்பதற்கும், சர்வதேச தொழில் சந்தையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப அதைக் கைகொள்வதை சீர்ப்படுத்துதல், தற்போதுள்ள சட்டக் கட்டுக்கோப்பை வலுப்படுத்துதல், சர்வதேச கடப்பாடுகளுக்கு இணங்குதல் மற்றும் சட்டங்களை உள்நாட்டில் நடைமுறைப்படுத்துவதை இலகுபடுத்துதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட தற்போதிருக்கின்ற 13 சட்டங்களின் ஏற்பாடுகளை கூட்டிணைக்கின்ற புதிய தொழில்வாய்ப்புச் சட்டமூலம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சட்டத்திற்கான திருத்தம் ஆகியவை சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அனைத்து தரப்பினரினதும் பங்களிப்புடன், வேலைவாய்ப்புக்காக இடம்பெயர்தல் தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கை மற்றும் செயல் திட்டம் வகுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், அதை நாடளாவியரீதியில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், மகப்பேறு, வேலையின்மை மற்றும் பணியாளர் நட்ஈடு உள்ளடங்கலாக பணியாளர்களுக்கு பல்வேறு நன்மைகளை உள்ளடக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய சமூகப் பாதுகாப்பு திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு விரிவான ஆய்வொன்று தற்போது நடைபெற்று வருகின்றது. அதே நேரத்தில், பாதுகாப்பான பணிச்சூழலை நிறுவுவதற்கும் நாடு முழுவதும் பாதுகாப்பு கலாசாரத்தை வளர்ப்பதற்கும் தயாராகவுள்ள தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கொள்கையின் திருத்தம் இறுதி நிலையில் உள்ளது. 2024 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படுகின்ற இந்த முயற்சிகள், பணியாளர்களின் நலனை மேம்படுத்து வதற்கும், பாதுகாப்பான, மிகவும் ஆதரவான பணிச்சூழலை வளர்ப்பதிலும் கணிசமான முன்னேற்றத்தை பிரதிபலிக்கின்றது.

இலங்கையின் அரச துறையை தவிர்த்து, தொழில்புரிகின்ற மற்றும் தொழிலற்றோரின் மொத்த தொழில் படை மற்றும் பாடசாலையிலிருந்து விலகியவர்களின் அனைத்து கல்வி மற்றும் தொழிற் தகைமைகளையும் கூட்டிணைப்பதற்காக தேசிய தொழில் சந்தை தகவல் முறைமையொன்றைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த முறைமை, தொழில் சந்தையில் கிடைக்கக் கூடிய அனைத்து வேலை வாய்ப்புகள், தொழிற் பயிற்சி வாய்ப்புகள் மற்றும் ஒட்டுமொத்த வேதனக் கொடுப்பனவுகளையும், ஏனைய தொடர்புடைய அனைத்து சேவைகளையும் நிருவகிக்கும் இயலுமை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இது, தொழில் படையிலுள்ள அனைத்து அளவுசார், தர வேறுபாடுகளையும் இற்றைப்படுத்தி முறைசார் மற்றும்

முறைசாரா துறைகளை உள்ளடக்கும். இதற்கு மேலதிகமாக, இது தொழில் படையுடன் தொடர்புடைய அனைத்து கொள்கை தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு இயலச்செய்யும்.

நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு மக்களுக்கு பயனுறுதிவாய்ந்த, ஆக்கத்திறன் மிக்க சேவையொன்றை வழங்குவதற்காக தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியவற்றின் செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கான விரிவான குடும்ப அபிவிருத்தி மற்றும் பராமரிப்புத் திட்டங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தற்போதைய முயற்சிகள் மேலும் பலப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, வீடமைப்பு அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் குறைந்த செலவில் உயர் கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்புகளை வழங்குதல் ஆகியவை இந்த முயற்சியின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும். மேலும், வெளிநாட்டுப் பணவனுப்பல்களை ஒழுங்குபடுத்துவதை ஊக்குவிப்பதற்காக பல நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள், புலம்பெயர் வேலையாளர்களுக்கு முழுஅளவிலான மின்சார வாகன இறக்குமதி உரிமங்களை வழங்குதல், வெளிநாட்டு பணம் அனுப்புதலில் சலுகை கடன் திட்டத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் மேலதிக தீர்வை கொடுப்பனவுகளை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இதன் விளைவாக, இந்த முயற்சிகள், 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 2023 ஆம் ஆண்டில் வேலையாளர்களின் பணவனுப்பல்களில் குறிப்பிடத்தக்களவில் 58மூ அதிகரிப்பினைப் பெறுபேறாக்கியுள்ளன.

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் உடலுழைப்பு வேலைகளுக்கான சமூக அங்கீகாரத்தை மேம்படுத்துவதற்காக “தொழில் கௌரவம்” (கருசரு) நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கு எதிர்கால தொழில் மற்றும் தொழில்முயற்சியாளர்களுக்கு பொருத்தமான வழிகாட்டுதலுக்காக “சிமார்ட் இளைஞர் கழக” நிகழ்ச்சித்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, 2025 ஆம் ஆண்டளவில் இலங்கையை சிறுவர் தொழில் அற்ற வலயமாக மாற்றுவதற்கு தொழில் திணைக்களம் தற்போது செயற்பட்டு வருகின்றது.

அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தேசிய உற்பத்தித்திறன் செயலகம், சிரம வாசனா நிதியம் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் ஆகியவை எண்ணற்ற முன்னெடுப்புக்களை முன்னெடுத்துள்ளன. இந்த முயற்சிகள் பணியாளரின் நலன்புரியை வளப்படுத்துதல், தொழில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய ஆழமான புரிதலை வளர்ப்பது, அரச மற்றும் தனியார் துறைகளில் உற்பத்தித்திறனை அதிகரிப்பது, தொழில்சார் பாதுகாப்பு கலாசாரத்தை வளர்ப்பது மற்றும் குறைந்தளவிலான தொழில் அபாயங்களுடன் பாதுகாப்பான, ஆரோக்கியமான வேலை சூழல்களை உருவாக்குவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன. மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பில் நம்பிக்கைக்குரிய வாய்ப்புகளை நோக்கி தனிநபர்களை வழிநடத்துவதில் இந்த நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மேற்குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றுவதில் அவர்களின் தலைமைத்துவம், வழிகாட்டல் மற்றும் ஆதரவுக்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கௌரவ மனுஷ நாணாயக்கார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ ஜகத் புஷ்பகுமார ஆகியோருக்கு எனது நன்றியைத் தெரிவித்துகொள்ள விரும்புகின்றேன். அமைச்சின் மேலதிக செயலாளர்கள், தொழில் ஆணையாளர் அதிபதி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி, வேலையாளர் நட்டஈட்டு அலுவலக ஆணையாளர் அதிபதி, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் மற்றும் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதிகள், தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பணிப்பாளர் ஆகியோருக்கும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், சிரம வாசனா நிதியம் மற்றும் வரையறுக்கப்பட்ட தனியார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் அதேபோன்று இந்த நிறுவனங்களின் அனைத்து மட்டங்களிலுமுள்ள அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**ஆர்.பி.ஏ. விமலவீர**
செயலாளர்
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

# பொருளடக்கம்


பக்கம்

**அத்தியாயம் ஒன்று : நிறுவனம்சார் விபரம் / நடைமுறைப்படுத்தல் பற்றிய சுருக்கம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு 1-12**

1.1 அறிமுகம் .......... 01
1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள் .......... 01
1.3 அமைச்சின் பிரதான தொழிற்பாடுகள் .......... 02
1.4 நிறுவகக் கட்டமைப்பு .......... 03
1.5 அமைச்சின் கீழுள்ள பிரிவுகள் .......... 04
1.6 அமைச்சின் அதிகாரத்தின் கீழுள்ள நிறுவனங்கள் .......... 07
1.6.1 தொழில் திணைக்களம் .......... 07
1.6.2 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் .......... 08
1.6.3 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் .......... 08
1.6.4 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகதார நிறுவகம் .......... 09
1.6.5 வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் .......... 09
1.6.6 தேசிய உற்பத்தித்திறன் செயலகம் .......... 10
1.6.7 சிரம வாசனா நிதியம் .......... 11
1.6.8 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் .......... 11
1.6.9 வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் .. 12

**அத்தியாயம் இரண்டு : முன்னேற்றமும் எதிர்கால நோக்கும் 13-65**

2.1 அமைச்சினால் அடையப்பெற்ற முன்னேற்றம் .......... 13
2.1.1 தொழில் துறை .......... 20
2.1.2 வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை .......... 42
2.2 அமைச்சின் எதிர்காலக் கண்ணோட்டம் .......... 59
2.2.1 தொழில் துறை .......... 59
2.2.2 வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை .......... 63

**அத்தியாயம் மூன்று : 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை .......... 67-82**

**அத்தியாயம் நான்கு : செயலாற்றுகை குறிகாட்டிகள் .......... 83-85**

**அத்தியாயம் ஐந்து : நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் செயலாற்றுகை (SDGs) .......... 87-90**

**அத்தியாயம் ஆறு : மனித வள விபரங்கள் .......... 91-108**

**அத்தியாயம் ஏழு : இணக்க அறிக்கை .......... 109-115**

# அட்டவணைகளின் பட்டியல்


| | | பக்கம் |
|---|---|---|
| அட்டவணைகள் 2.1 | 2023.01.01 முதல் 2023.12.31 வரை நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 20 |
| அட்டவணைகள் 2.2 | நடத்தப்பட்ட பரிசோதனைகள் - 2023.01.01 முதல் 2023.12.31 வரையான முன்னேற்றம் ........ | 21 |
| அட்டவணைகள் 2.3 | வேலைநிறுத்தங்கள் பற்றி அறிக்கையிடப்பட்ட தரவு - 2023.01.01 முதல் 2023.12.31 வரை ........ | 23 |
| அட்டவணைகள் 2.4 | 2023 இல் தொழில் தரநியமங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் | 24 |
| அட்டவணைகள் 2.5 | 2023.01.01 முதல் 2023.12.31 வரையான காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் ........ | 24 |
| அட்டவணைகள் 2.6 | பணியாளர்களின் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள ........ | 25 |
| அட்டவணைகள் 2.7 | பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண்கள், இளைஞர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலுள்ள முன்னேற்றம் ........ | 25 |
| அட்டவணைகள் 2.8 | நீதிமன்றங்களினாலான வழக்குகளின் செயல்பாடு - 2023.01.01 முதல் 2023.12.31 வரை | 27 |
| அட்டவணைகள் 2.9 | தொழில் திணைக்களத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ........ | 30 |
| அட்டவணைகள் 2.10 | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் முன்னேற்றம ........ | 30 |
| அட்டவணைகள் 2.11 | தொழிலில் அமர்த்துதல் – மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம் | 31 |
| அட்டவணைகள் 2.12 | நடத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் ........ | 36 |
| அட்டவணைகள் 2.13 | அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் தன்மை ........ | 38 |
| அட்டவணைகள் 2.14 | மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்களால் ஏற்பட்ட சேதங்களின் தன்மை ...... | 38 |
| அட்டவணைகள் 2.15 | நட்டஈட்டுக் கொடுப்பனவில் முன்னேற்றம் – வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் ........ | 39 |
| அட்டவணைகள் 2.16 | உரிமம் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டுவேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், வெ ளிநாட்டுவேலைவாய்ப்புக் கட்டளைகளை அங்கீகரித்தல் மற்றும் வெளிநாட்டு தொழில்களுக்கு பதிவுசெய்தல் | 46 |
| அட்டவணைகள் 2.17 | வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாக அனுமதிப்பத்திரம் பெற்ற வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் / அனுமதிப்பத்திரம் பெறாத ஏனைய தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் ........ | 47 |
| அட்டவணைகள் 2.18 | புலம்பெயர் வேலையாளர்கள் அல்லது அவர்கள் சார்பாக செய்யப்படும் முறைப்பாடுகளை தீர்த்தல் மற்றும் ஆட்கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள் - இலங்கை வெளிநாட்டு வேலைவாப்புப் பணியகம் ........ | 47 |
| அட்டவணைகள் 2.19 | புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்- இ. வெ.வே.ப | 48 |
| அட்டவணைகள் 2.20 | நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - இ. வெ.வே.ப | 50 |
| அட்டவணைகள் 2.21 | வேலை தேடுபவர்களை வேலை வங்கி ஊடாக பதிவு செய்தல்- இ. வெ.வே.ப | 50 |
| அட்டவணைகள் 2.22 | தொழிலுக்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாப்புப் பணியகத்தினால் ஆட்சேர்ப்பு - இ. வெ.வே.ப ........ | 50 |
| அட்டவணைகள் 2.23 | வெளிநாட்டு வேலை தேடுபவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை/ நடமாடும் சேவைகளை நடத்துதல் மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் மற்றும் பாதுகாப்பான தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வு - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ........ | 51 |
| அட்டவணைகள் 2.24 | வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்காக வலய மற்றும் மாவட்ட மட்டத்தில் தொழில் சந்தைகளை நடத்துதல் - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ........ | 51 |
| அட்டவணைகள் 2.25 | புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுதல் - இலங்கை வெளிநாட்டு வேலைவாப்புப் பணியகம் ........ | 53 |
| அட்டவணைகள் 2.26 | சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் - 2023 ........ | 55 |
| அட்டவணைகள் 2.27 | தாபன செயற்பாடுகளின் முன்னேற்றம் ........ | 57 |
| அட்டவணைகள் 2.28 | திறைசேரி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல் ........ | 57 |

அட்டவணைகள் 2.29 தொழில் கட்டளையின் எண்ணிக்கை (இலங்கை வெளிநாட்டு வேவலைவாய்ப்பு முகவர்) ........ 65
அட்டவணைகள் 3.1 வருவாய் சேகரிப்பில் செயலாற்றுகை ........ 73
அட்டவணைகள் 3.2 ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதில் செயலாற்றுகை ........ 73
அட்டவணைகள் 3.3 நி.ஒ.208 இன் பிரகாரம் வேறு அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவர் என்ற வகையில் இந்த அமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் ....... 73
அட்டவணைகள் 3.4 நிதி சாரா சொத்துக்களைப் அறுக்கையிடுவதில் செயலாற்றுகை ........ 74
அட்டவணைகள் 4.1 அமைச்சின் செயலாற்றுகை குறிகாட்டிகள் ........ 82
அட்டவணைகள் 5.1 அமைச்சுடன் தொடர்புடைய நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள்........ 87
அட்டவணைகள் 6.1 2023.12.31 இலுள்ளவாறான அமைச்சு பணியாட்டொகுதி ........ 91
அட்டவணைகள் 6.2 தொழில் அமைச்சின் பணியாட்டொகுதிக்காக நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் – 2023 ........ 91
அட்டவணைகள் 6.3 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் தொழில் திணைக்கள அலுவலர்களின் பங்கேற்பு - 2023 ........ 94
அட்டவணைகள் 6.4 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அலுவலர்களின் பங்கேற்பு - 2023 ........ 97
அட்டவணைகள் 6.5 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்கள அலுவலர்களின் பங்கேற்பு - 2023 ........100
அட்டவணைகள் 6.6 தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ........102
அட்டவணைகள் 6.7 வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ........ 102
அட்டவணைகள் 6.8 வெளிநாட்டுப் பயிற்சிப் கற்கை நெறிகளில் அமைச்சு அலவலர்களின் பங்கேற்பு ..... 102
அட்டவணைகள் 6.9 வெளிநாட்டு பயிற்சி கற்கை நெறிகளில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அலுவலர்களின் பங்கேற்பு ........107
அட்டவணைகள் 7.1 இணக்க அறிக்கை ........108


## வரைபடங்களின் பட்டியல்


வரைபடங்கள் 2.1 2019 முதல் 2023.12.31 வரை அரசியலமைப்பு உரிமைகள் மீறல் பற்றிய முறைப்பாடுகளைப் பெறுதல் மற்றும் தீர்த்தல் ........ 22
வரைபடங்கள் 2.2 2019 முதல் 2023.12.31 வரை கைத்தொழில் பிணக்குகள் பற்றிய முறைப்பாடுகளைப் பெறுதல் மற்றும் தீர்த்தல் ........ 22
வரைபடங்கள் 2.3 2023 01.01 முதல் 2023.12.31 வரை நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு முடிக்கப்பட்ட வழக்குகள ........ 28
வரைபடங்கள் 2.4 அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்திய விபத்துக்களின் எண்ணிக்கை 37
வரைபடங்கள் 2.5 அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் எண்ணிக்கை 37
வரைபடங்கள் 2.6 சுற்று நீதிமன்ற பிரதேசத்தால் அறிக்கையிடப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை ........ 39
வரைபடங்கள் 2.7 சிரம வாசனா நிதியத்தின் வளர்ச்சி ........ 41
வரைபடங்கள் 2.8 லொத்தர் வருமானம் - சிரம வாசனா நிதியம் ........ 42
வரைபடங்கள் 2.9 ஷிரமிக சுரகமுவ“ வின் கீழான பதிவு ........ 42
வரைபடங்கள் 2.10 அபிவிருத்தி அலுவலர்களினால் தயாரிக்கப்பட்ட குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பராமரிப்புத் திட்டங்கள் ........ 43
வரைபடங்கள் 2.11 நடத்தப்பட்டகணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மற்றும் கணக்காய்வு விசாரணைகள் ........ 57


## படங்கள் பட்டியல்


படம் 2.1 தேசிய தொழில் ஆலோசனைச் சபைக் கூட்டம் ........ 17
படம் 2.2 யப்பான் அரசாங்கத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கைச்சாத்திடுதல் 17
படம் 2.3 சிறுவர் தொழில் பற்றிய நிகழ்ச்சித்திட்டம் ........ 26
படம் 2.4 சர்வதேச மகளீர் தின நிகழ்வினையொட்டி “வடலிய” வெளியீட்டின் அங்குரார்ப்பணம் 26
படம் 2.5 “கரு சரு” நிகழ்ச்சித்திட்டம் பற்றிய கலந்துரையாடல் ........ 33

| | | | |
|---|---|---|---|
| படம் | 2.6 | டிப்புளோமா வழங்கும் வைபவம் ........ | 35 |
| படம் | 2.7 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் மாநாடு ......... | 36 |
| படம் | 2.8 | கொரிய தொழில் கட்டளைகள் பற்றிய கலந்துரையாடல் ........ | 47 |
| படம் | 2.9 | புலம்பெயர் வேலையாளர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துல் ........ | 49 |
| படம் | 2.10 | கொரிய தூதுவருடனான சந்திப்பு ........ | 54 |
| படம் | 2.11 | சவுதி அரேபிய உயர் ஸ்தானிகருடனான சந்திப்பு ........ | 54 |
| படம் | 2.12 | யாழ்ப்பாண மாவட்டத்தில் நடத்தப்பட்ட நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் | 55 |


## விளக்கப்படங்களின் பட்டியல்


| | | | |
|---|---|---|---|
| விளக்கப்படம் | 1.1 | அமைச்சினது நிறுவனக் கட்டமைப்பு ........ | 03 |

# அத்தியாயம் ஒன்று1

## நிறுவனம்சார் விபரம் /

## நடைமுறைப்படுத்தல் பற்றிய சுருக்கம்

# நிறுவனம்சார் விபரம் / நடைமுறைப்படுத்தல் பற்றிய சுருக்கம்

## தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

### 1.1 அறிமுகம்

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பிரதான செயற்பணியானது, வேலையாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்து, தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தி தேர்ச்சியுள்ள வேலையாளர்களை உள்ளூர் மற்றும் சர்வதேச தொழில் சந்தைக்கு அனுப்புதல் மற்றும் நாட்டில் தொழிற்றுறை அமைதியைத் தாபிப்பதன் மூலம் பொருத்தமான பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதாகும். இந்தச் செயற்பணியை நிறைவேற்றுவதில், குறிப்பிட்ட செயற்பாடுகளின் மூலம் வேலையாளர்களுக்கு உச்ச சேவையை வழங்குகின்ற பொறுப்பை இந்த அமைச்சு கொண்டுள்ளது. அமைச்சின் இந்த வகிபாகத்தை ஆற்றுவதில், 2022.07.22 ஆம் திகதியிடப்பட 2289.'.43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் இலங்கையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சமவாயங்கள் ஆகியவற்றுடன் அமைச்சு தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

### 1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

**தொலைநோக்கு**

திருப்திமிகு உற்பத்திசார் தொழிலணி

**செயற்பணி**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தைகளுக்கு தேர்ச்சியுள்ள மனித வளங்களை வழங்குதல் மற்றும் தொழிற்றுறை அமைதி, சமூகப் பாதுகாப்பு, வேலையாட்களின் உரிமைகள் மற்றும் ஆக்கத்திறன் போன்றவற்றை மேம்படுத்துவதனூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய பங்களிப்பு

**குறிக்கோள்கள்**

- ஒழுக்கமான, பாதுகாப்பான மற்றும் உற்பத்தித்திறன் மிக்க வேலைவாய்ப்பைப் பேணிவளர்க்கும் நன்கு நிருவகிக்கப்படும் தொழிலாளர் புலம்பெயர்வு துறையின் வெகுமதிகளை இலங்கை அறுவடை செய்தல்.
- புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகள், சுகாதாரம், பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வேலையாளர்களின் புலம்பெயர்வு பயணத்தின் அனைத்து நிலைகளிலும் ஒட்டுமொத்த நலனை உறுதிசெய்தல்.
- இலங்கையின் தொழில் அணியை உலகளாவிய தொழில் சந்தையை வினைத்திறனுடன் அணுகுவதற்கு வசதியளித்தல் மற்றும் அதன்மூலம் சிறந்த சமூக-பொருளாதார நன்மைகளை அனுபவிப்பதற்கு வசதியளித்தல்,
- நாட்டின் அபிவிருத்தியின் முக்கியமானதொரு அங்கமாக வேலைவாய்ப்புக்கான குடியகல்வை இலங்கை வினைத்திறனுடன் நிலைநிறுத்துதல்.
- முத்தரப்பினையும் வலுப்படுத்துவதன் மூலம் தொழில்வழங்குநர்-பணியாளர் உறவுகளை பலப்படுத்துதல்.
- வேலை நிலைமைகள் மற்றும் பணியாளரின் உரிமைகள் சர்வதேச தரநியமங்களுடன் ஒத்துப்போவதை உறுதி செய்தல்.
- சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்.
- தொழில்புரியும் பெண்களை வலுவளித்தல், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் தொழில்சார் சட்டங்களை, உரிமைகளைப் பலப்படுத்துதல்.
- தொழில் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளில் நெகிழ்வுத்தன்மையை அதிகரித்தல்.
- உழைக்கும் மக்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன்மிக்க உபாயங்களை வகுத்தமைத்தல்.
- தேர்ச்சியுள்ள வெளிநாட்டு தொழிலணியொன்றை உருவாக்குவதற்கான கொள்கை வழிகாட்டல்.

## 1.3 அமைச்சின் பிரதான தொழிற்பாடுகள்

1. அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு விடயங்கள் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல், நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. வேலைவாய்ப்புக்கான புலம்பெயர்வு தொடர்பான இலங்கையின் தேசியக் கொள்கையை அத்துடன் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மீதான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.

3. சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப தொழில் உறவுகள் நியமங்கள், பணியாளர் நிருவாகம், நலன்புரி மற்றும் சுகாதாரத்திற்கான கொள்கைகளை வகுத்தமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

4. சர்வதேச தொழில் தாபனம் மற்றும் சர்வதேச சமூகப் பாதுகாப்பு ஒன்றியங்களுடன் கூட்டுறவினைப் பேணுதல்.

5. ஊழியர் சேமலாப நிதியம், தனியார் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வூதியத் திட்டங்களின் நிருவாகமும், ஒழுங்குபடுத்துதலும்.

6. தொழிற்றுறை உறவுகள் மற்றும் தொழில் பிணக்குகளின் நடுத்தீர்ப்பு.

7. தொழில் உறவுகள் மற்றும் அவற்றை ஒழுங்குபடுத்துதலுடன் தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை வகுத்தமைப்பதுடன் தொடர்புபட்ட விடயங்கள்.

8. தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்காக பொது மற்றும் தனியார் துறைகளில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளையும் பயன்படுத்துவதற்கான நேர்மறையான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

9. தேசிய உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்து, நடைமுறைப்படுத்துதல்.

10. அத்தகைய வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான திறன்களை மேம்படுத்துவதற்கு உரிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் நடவடிக்கைகளை கைக்கொள்ளுதல்.

11. புலம்பெயர் வேலையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல்.

12. இலங்கையில் அந்நிய செலாவணியைச் சேமிப்பதற்கும் முதலீடு செய்வதற்கும் புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு விசேட வசதிகளை வழங்குதல்.

13. வெளிநாட்டு தொழிலின் பின்னர் இலங்கைக்குத் திரும்புபவர்கள் தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

14. வேலையாளர்களின் தொழில் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை வழங்குதல் மற்றும் நலன்புரியினைப் பேணுதல்.

15. வெளிநாடுகளில் விபத்துக்குள்ளான உரித்துள்ள நபர்கள் நட்டஈட்டினைப் பெறுகின்ற செயல்முறையை வலுப்படுத்துவதற்கு சட்ட சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல்.

16. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகங்களை ஒழுங்குபடுத்துதல்.


17. அமைச்சின் கீழுள்ள பொதுச் சேவைகளை பயனுள்ளதாகவும், மக்கள் சார்ந்ததாகவும் வழங்குதல்.

18. அமைச்சின் அதிகாரத்தின் கீழுள்ள நிறுவனங்களுக்கு, அதாவது தொழில் திணைக்களம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், தேசிய உற்பத்தித்திறன் செயலகம், வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம் மற்றும் சிரம வாசனா நிதியம் ஆகியவற்றுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களையும் மேற்பார்வை செய்தல்.

# 1.4 நிறுவனத்தின் கட்டமைப்பு

**நிறுவனத்தின் கட்டமைப்பு**

**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**




**விளக்கப்படம் 1.1** - அமைச்சினது நிறுவனக் கட்டமைப்பு

## 1.5 அமைச்சின் கீழ் வருகின்ற பிரிவுகள்

- **நிருவாகம் மற்றும் தாபனங்கள் பிரிவு**

அமைச்சினதும் அதனோடு இணைந்த நிறுவனங்களினதும் ஒட்டுமொத்த நிருவாகம், முகாமைத்துவம், பராமரிப்பு, பயிற்சியளித்தல் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள் இப்பிரிவின் அதிகாரத்தின் கீழ் வருகின்றன. இது, மனித வள முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய செயல்பாடுகளுக்கும் பொறுப்பானதாகும். இதன்படி, பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

- அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள அரச அலுவலர்களினதும், கௌரவ அமைச்சரது துணைப் பதவியினரின் தனிநபர் கோவைகளையும் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்டுள்ள தாபனங்களின் செயற்பாடுகளையும் பேணுதல் அத்துடன் பதவியினர் பற்றிய தரவுகளை நாளதுவரைப்படுத்துதல்.

- அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் பணியாற்றுகின்ற அமைச்சு அலுவலர்கள் தொடர்பிலான அலுவல்களை உருவாக்குதலும் நிருவகித்தலும்.

- அமைச்சரவை விஞ்ஞாபனத்தைத் தயாரித்தல் மற்றும் அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

- தொழில் சட்டங்களை நாளது வரைப்படுத்துதல், புதிய சட்டவாக்கங்களை சட்டமாக்குதல் மூலம் தொழிற்றுறை ஒத்துழைப்பினை ஏற்படுத்துவதற்கும், வெளிநாட்டு வேலை வாய்ப்பினை மேம்படுத்துவதற்கும் கொள்கையளவிலான பங்களிப்பினை வழங்குதல்.

- ஆலோசனைக் குழுவினால், அரச முறையீட்டு ஆணைக்குழுவினால் கேட்கப்பட்ட, அதே போன்று பாராளுமன்ற கேள்விகளுக்கான பதில்களை வழங்குதல் மற்றும் சனாதிபதி செயலகத்திற்கு, பிரதம அமைச்சரின் அலுவலகத்திற்கு நேரடியாக மேற்கொள்ளப்பட்டு, அவர்களால் அனுப்பப்பட்ட பொது மக்களின் முறைப்பாடுகளுக்கும் அதேபோன்று உரிய நிறுவனங்களால் பொது மக்களிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்ட மனக்குறைகளுக்கும் பதில்களை வழங்குதல்.

- அமைச்சின் வாகனங்களை நிருவகித்தல், தேவையான கட்டமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடுகள், பயிற்சிச் செயற்பாடுகள், மூலதன பொருட்களினதும், உபகரணங்களினதும் முகாமைத்துவம், மேலதிக நேர, விடுமுறைக் கொடுப்பனவு, பணிக்கொடை காப்புறுதி மற்றும் இடர் கடன்களுக்கான அனுமதி ஆகியவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

- **அபிவிருத்திப் பிரிவு**

சர்வதேச தொழில் தாபனத்தினது உறுப்பு நாடொன்றாக இலங்கை, சர்வதேசரீதியில் அங்கீகரிக் கப்பட்ட சமவாயங்கள் மற்றும் பரிந்துரைகளைப் பின்பற்றுவதனூடாக இலங்கைக்குள் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல், இந்தப் பிரிவின் கீழ் வருகின்ற தொழில் புலம்பெயர்வுடன் தொடர்புபட்ட சர்வதேச சமவாயங்களுடன் இணங்கி, உரிய சட்டங்கள், சட்டவாக்கங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டுநெறிகள் போன்றவற்றை தயாரித்தல், வலுப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புபட்டுள்ள தொழில் தொடர்பான பிரச்சினைகளையும் மற்றும் செயற்பாடுகளையும் நிவர்த்தி செய்தல்.

- இலங்கையால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழில் தாபனத்தின் உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் சர்வதேச தொழில் தாபனத்திற்கு சமர்ப்பித்தல்.

- தொழில் துறையாக, இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து சர்வதேச சமூகத்திற்கு விளக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- தொழில் துறை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சர்வதேச தொழில் தாபனத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.

- புதிய சட்டங்களை வரைவதற்கும், தற்போதிருக்கின்ற தொழில் சட்டங்களை தற்காலத்திற்கு ஏற்றவாறு திருத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் உதவிகளை வழங்குதல்.

- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் புலம்பெயர் வேலையாளர்களுடன் தொடர்புடைய ஏனைய அமைப்புகளால் கோரப்பட்ட அறிக்கைகளை பரிந்துரைகளுடன் சமர்ப்பித்தல்.

- வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் / உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல், ஏற்கனவே உள்ள ஒப்பந்தங்களை இற்றைப்படுத்தல் மற்றும் ஒப்பந்தங்களின் செயற்பாட்டைப் பின்தொடர்தல்.

- கூட்டுக் குழு கூட்டங்களுடன் தொடர்புடைய செயல்பாடுகள் மற்றும் பிராந்திய / உலகளாவிய கலந்துரையாடல்களுடன் தொடர்புபட்ட அனைத்து செயற்பாடுகளும்.

- களப் பணிகளை மேற்கொள்கின்ற அபிவிருத்தி அலுவலர்களுக்கு (வெளிநாட்டு வேலைவாய்ப்பு) விடயம் தொடர்பான பயிற்சியை வழங்குதல் மற்றும் பயிற்றுவிப்பாளர் களின் பயிற்சிக் குழாத்தைப் பராமரித்தல்

- அபிவிருத்தி அலுவலர்களினூடாக மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்.

- புலம்பெயர்ந்த பெண் வேலையாளர்களின் குடும்பப் பின்னணி அறிக்கைகள் தொடர்பாக மேன்முறையீட்டுக் குழுக் கூட்டங்களை நடத்தி, குழுவின் முடிபுகளைத் தெரிவித்தல் மற்றும் பின்தொடர்தல்.

- தொழில் துறையில் நிலவுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கும் நோக்கில் வேலையாட்கள் செறிந்து வாழ்கின்ற பகுதிகளில் நடமாடும் சேவைகளை ஒழுங்கமைத்தல்.

- அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அலுவலர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வழங்குவதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தல்.

- **திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு**

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நோக்கி அபிவிருத்தித் திட்டங்களை வழிநடத்துவதற்குத் தேவையான அமைச்சு மற்றும் அதன் அதிகாரத்திற்குட்பட்ட அனைத்து நிறுவனங்களின் திட்டங்களை வகுத்தல், மற்றும் செயல்படுத்துதல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் பின்தொடர்தல் ஆகியவை இந்தப் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாகும். இதற்கு மேலும், இப்பிரிவு பின்வரும் கடமைகளையும் ஆற்றியுள்ளது.

- அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திப் பணிகளை உள்ளடக்கிய வருடாந்த செயற்திட்டத்தை தயாரித்தல் மற்றும் அதனை உரிய தரப்பினருக்கு அனுப்புதல். பூஜ்ஜிய அடிப்படையிலான வரவுசெலவுத் திட்டத்திற்கு அமைவாக வருடாந்த செயற்றிட்டத்தைத் தயாரித்தல், அதனை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு மாதத்தின் முன்னேற்றத்தையும் மதிப்பிடுவதன் மூலம் இலக்குகளை அடைவதை கண்காணித்தல்.

- தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் நியதிகளில் சனாதிபதி அலுவலகம், நிதி அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் அத்துடன் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைதல் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை மாதாந்த, காலாண்டு அடிப்படையில் சமர்ப்பித்தல்.

- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்கள் ஊடாக மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல்.

- தொழில் துறையின் காலத்துடன்கூடிய பல்வேறு கருப்பொருள்களின் அடிப்படையில் ஆண்டுதோறும் சஞ்சிகையொன்றினை வெளியிடுதல்.

- இலங்கை தொழில் செய்திமடலை வெளியிடுதல்.

- அமைச்சினால் அடையப்பெற்ற முன்னேற்றம் மற்றும் முன்னேற்ற அறிக்கை ஆகியவற்றை விபரிக்கும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்திற்கு தயாரித்தல்.

- **நிதிப் பிரிவு**

அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இணங்கும் வகையில் உரிய குறிக்கோள்களை அடைவதற்கு இந்த அமைச்சுக்கு வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி வளங்களை வினைத்திறனுடன், ஆக்கத் திறனுள்ள வகையில், பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் நிதிப் பிரிவின் பிரதான பொறுப்பாகும்.

- 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கைக்கமைவாக வருடாந்த பொருட் கணக்கெடுப்பினை நடத்துதல்.
- நிதி அதிகார முகவர்கள் தொடர்பான அறிக்கைகளையும், நிதி அதிகாரிகார தூதுக்குழு தொடர்பான செயற்பாடுகளை தயாரித்தல்.
- வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரித்தல்.
- ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.
- அரச கணக்குகள் கழுவுக்கான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் பொது திறைசேரிக்கும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கும் மாதாந்த மற்றும் காலாந்தர நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.
- கணக்காய்வு விசாரணை அறிக்கைகளை இற்றைப்படுத்திப் பராமரித்தலும், உரிய கணக்காய்வு விசாரணைக்கான பதுலை கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்புதல்.

- **அகக் கணக்காய்வுப் பிரிவு**

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (ஆ) மற்றும் (எ) பிரிவில் தரப்பட்டவாறும் கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்தின் 2019.01.12 ஆம் திகதியிடப்பட்ட 01.∴2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் தேவைப்பாடுகள் மற்றும் நிதி ஒழுங்கு 133 மற்றும் 134 நியதிகளின்படி அகக் கணக்காய்வுப் பிரிவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி பிரதம கணக்காய்வு அலுவலரின் பொறுப்பு ஆற்றப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு நியதிகளின்படி மேற்கொள்ளப்பட்ட நியமனங் களின்படி தொழில் அமைச்சின் அகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் ஆற்றப்படுகின்றன.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் தொழில் திணைக்களம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், சிரம வாசனா நிதியம், தேசிய உற்பத்தித்திறன் செயலகம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் (பிறைவேட்) லிமிட்டெட் உள்ளடங்கலான அதன் கீழுள்ள நிறுவனங்களின் உரிய உள்ளக கணக்காய்வு யெற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பு மற்றும் தேவைகளுக்கேற்ப விசேட விசாரணைகளை மேற்கொள்வதும் உள்ளக கணக்காய்வின் கீழ் வருகின்றன.

**பிரதான தொழிற்பாடுகள்**

- நிறுவனத்திற்குள் உள்ளக கணக்காய்வு மற்றும் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனை மதிப்பிடுதல்.
- அரசாங்கத்தின் தாபனக் கோவை, அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் அத்துடன் பொது நிருவாக அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரி ஆகியவற்றினால் அவ்வப்போது வழங்கப்படும் பிற குறைநிரப்பு அறிவுறுத்தல்களுடன் இணங்கியொழுகுவதை ஆய்வு செய்தல்.
- கணக்காய்வு கோட்பாடுகள் மற்றும் முறைமைகளைப் பின்பற்றி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, அதன் திணைக்களங்கள் மற்றும் பிற இணைந்த நிறுவனங்களின் செயற்பணி மற்றும் குறிக்கோள்களுடன் ஒத்துப்போகும் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை வினைத்திறனுடன் முகாமை செய்தல்.
- அமைச்சின் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கொள்கைகள், திட்டமிடல்கள், நடைமுறைகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக தாபிக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பீடு செய்தல்.
- சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் சரிபார்த்தல் மற்றும் சொத்துக்களின் இருப்பை சரிபார்த்தல்.
- அமைச்சின் தாபிக்கப்பட்ட குறிக்கோள்களுக்கு ஏற்ப பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடு களை அல்லது நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் தகவல்களை உறுதிப்படுத்துதல்.
- நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறைகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயன்முறைகளை உருவாக்குவதற்கு வழிகாட்டல்களை வழங்குதல்
- கணக்காய்வுக்குப் பின்னரான காண்பிப்புகளைத் தெரிவித்தல் மற்றும் அதன் பின்னர் தேவையான திருத்தங்களை சமர்ப்பித்தல்.

- வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.
- முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு அறிக்கைகளை உரிய திகதியளவில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் மேற்கொள்ளுதல்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தைக் கூட்டித், தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- காலத்திற்கு காலம் முகாமைத்துவத்தால் குறித்தொதுக்கப்பட்ட குறிப்பிட்ட கடமைகளை ஆற்றுதல் மற்றும் அறிக்கையிடுதல்.

## 1.6 இந்த அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்கள்

### 1.6.1 தொழில் திணைக்களம்

பிரித்தானிய காலனித்துவ காலப்பகுதியில் பிரித்தானிய அதிகாரிகள், 1923 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இந்திய குடிவரவு தொழில் கட்டளைச் சட்டத்தை தேயிலை மற்றும் கோபி தோட்டங்களில் வணிகப் பயிர்ச்செய்கையின் கீழ் பிரித்தானிய காலனி ஆட்சியாளர்களால் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட இந்திய குடிபெயர் தொழிலாளர்களுக்கு நலன்புரியினை வழங்கும் நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தியிருந்தனர். இந்த முயற்சி, தற்போதைய தொழில் திணைக்களத்தின் தோற்றத்திற்கு வழியமைத்து இந்திய தொழில் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினைத் தாபித்திருந்தது. தற்போது, தொழில் திணைக்களம், தொழில் வழங்குநர்கள், பணியாளர்கள் மற்றும் அரசாங்கம் அகிய முத்தரப்பு உறவுகளை வலுப்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் செயற்பாட்டை மேற்கொள்கின்றது.

தொழில் திணைக்களம் என்பதுதொழில் சட்டங்களின் கீழ் அரசு மற்றும் தனியார் துறைகளிலுள்ள வேலையாளர்களின் தொழில் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும், 2023 ஆம் ஆண்டில், நிறுவன மட்டத்தில் தொழில்துறை நல்லிணக்கத்தை உறுதி செய்வதற்கான முயற்சிகளுக்கு முன்னுரிமையளித்து செயல்படுத்துவதன் மூலம் தொழில் திணைக்களம் தனது பங்கை மேலும் மேம்படுத்தியிருந்தது. இது, தொழில் வழங்குனருக்கும் பணியாளர் களுக்குமிடையில் சாதகமான உறவுகளைப் பேணுவதன் மூலமும் தொழில் வழங்குனர்களின் ஒத்துழைப்புடன் பணியாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலமும் எய்தப்பட்டிருந்தது.

மிகவும் உகந்த முதலீட்டுச் சூழலை வளர்ப்பதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்புக்கு இணங்க, புதிய தொழில் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு 2023 ஆம் ஆண்டில் தொழில் திணைக்களம் ஆரம்ப முயற்சிகளை எடுத்திருந்தது. இந்த இற்றைப்படுத்தப்பட்ட சட்ட வாக்கமானது, தொழில்வழங்குனர் - பணியாளர் உறவுகளை மேம்படுத்தலுவதனூடாக பல தசாப்தங்கள் பழமையான, சிக்கலான தொழில் சட்டங்களை எளிமைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**குறிக்கோள்கள்**

- தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறை சேவை நிறுவனங்களில் நிலையான கைத்தொழில் அமைதியை உறுதிப்படுத்தல்.
- ஆரோக்கியமான பணிச்சூழலை உருவாக்குவதன் மூலமும், தொழில் தரநியமங்களை உருவாக்குதன் மூலமும் பணியாளர்களின் வேலை நிலைமைகளை செம்பமைப்படுத்துதல்.
- பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- பெண்கள் மற்றும் இளைஞர்களின் தொழில்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்.
- பணியாளர்களின் சுகாதார நிலைமைகளுக்கு உகந்த மற்றும் பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்குதல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

- சமூகக் கலந்துரையாடலை மேம்படுத்துவதனூடாக நிறுவனம்சார் மட்டத்தில் தொழில் தருநர்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையிலான உறவினை அதிகரிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்,
- தொழில் சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் உரிமைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- சமரசம், கூட்டு உடன்படிக்கை மற்றும் மத்தியஸ்தம் என்பவற்றினூடாக கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்.
- ஊழியர் சேமலாப நிதியத்தினூடாக பணியாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்குதல்.
- பணியாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை நிவர்த்தி செய்தல்.
- சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல் மற்றும் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண்களைப் பாதுகாத்தல்.
- சம்பளங்கள் மற்றும் வேலை நிபந்தனைகளை வலுப்படுத்துவதன் மூலம் தொழில் நியமங்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

## 1.6.2 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

ஒரு நாட்டின் வரையறுக்கப்பட்ட வளங்களின் உச்சப் பயன்பாடு அதன் முன்னேற்றத்திற்கு முக்கியமானதொரு காரணியாகும். தற்போதுள்ள வளங்களை உகந்த முறையில் பயன்படுத்து வதற்கான செயலூக்கமான, உயர்தர மனித வள அடித்தளம் இல்லாமை நாட்டின் அபிவிருத்திக்கு தடையாக உள்ளது. எனவே ஒரு நாட்டின் மிக முக்கியமான சொத்துக்களான மனித வளங்களின் அபிவிருத்தியும், முகாமைத்துவமும் அதன் அபிவிருத்தி செயற்பாட்டின் அத்தியாவசியமான ஆக்கக்கூறுகளாகும்.

இளைஞர் வேலையின்மையை ஒழிப்பதற்காக இலங்கையில் மனித வளங்களை விருத்தி செய்தல் மற்றும் அபிவிருத்தி இலக்குகளை அடைய உதவுதல், தொழில் அணியின் தரத்தை செம்மைப்படுத்துதல் மற்றும் தொழில் வழிகாட்டல், தொழில் உருவாக்கத்தினூடாக தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பதில் இளைஞர் சமூகத்தை ஈடுபடுத்துதல் போன்ற இத்தகைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம் 2010.01.01 ஆம் திகதியிலிருந்து வலுக்கு வரும்வகையில் தாபிக்கப்பட்டது.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. தொழில் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்.
2. தொழில் சந்தை தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரப்புதல்.
3. அரச வேலைவாய்ப்பு சேவைகளை வழங்குதல்.
4. சர்வதேச இணைப்புகளை உருவாக்குதல்.
5. மனித வள அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

**குறிக்கோள்கள்**

- 2025 ஆம் ஆண்டளவில் பெண் தொழிலணியின் பங்கேற்பு விகிதத்தை 70% முதல் 73% ஆகவும், ஆண் வேலையாளர் பங்கேற்பு விகிதத்தை 32% முதல் 34.5% ஆகவும், 2030 ஆம் ஆண்டளவில் ஆண் தொழிலணியின் பங்கேற்பு விகிதத்தை 75% ஆகவும், பெண் வேலையாளர் பங்கேற்பு விகிதம் 45% ஆகவும் அதிகரித்தல்.
- 2030 ஆம் ஆண்டளவில் வெளிநாடுகளுக்குச் செல்லும் தேர்ச்சியுள்ள / தொழில்சார் வேலையாளர்களின் சதவீதத்தை இரட்டிப்பாக்குதல் (36.5% இலிருந்து 73%) மற்றும் வெளிநாடு செல்லும் தேர்ச்சியற்ற வேலையாளர்களின் சதவீதத்தை குறைத்தல்.
- 2025 ஆம் ஆண்டளவில் நுனுடீஐ சுட்டெண்ணில் இலங்கையின் நிலையை 99 இலிருந்து 89 ஆக உயர்த்துவதற்கான கொள்கை கலந்துரையாடல்.
- 2030 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய தேவையை நிறைவுசெய்யும் வகையில் திறமையான மற்றும் நெறிமுறை சார்ந்த தொழில் அணியை உருவாக்குவதற் கான கொள்கை வழிகாட்டுதல்களை வழங்குதல்.

## 1.6.3 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் 2007 செப்ரெம்பர் 11 ஆம் திகதி அலுவலகரீதியாகத் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் பாராளுமன்றத்தினால் சட்டரீதியாக ஒன்றிணைக்கப்பட்டது. தொழிற் றுறையின் முத்தரப்பு அக்கறைதாரர்களை அதாவது தொழில்தருநர்கள், பணியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழிற் சங்கங்கள் மற்றும் அரச அலுவலர்களைக் கொண்டிருக்கின்ற ஆளுநர்கள் சபையொன்றினால் நிருவகிக்கப்படுகின்றது.

இந்த நிறுவகத்தின் பிரதான தொழிற்பாடு, தொழில் சட்ட வாக்கங்கள், ஒழுங்குவிதிகள் பற்றியும் அதேபோன்று பல்வேறு முகாமைத்துவ விடயப்பரப்புகள் தொடர்பிலும் அறிவைப் பெற்றுள்ள ஆக்கத்திறன் மிக்க, பலம்வாய்ந்த தொழில் அணியொன்றை உருவாக்குவதற்குத் தேவையான செயற்பாடுகளை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்துதல், ஒழுங்கமைத்தல் போன்றவையாகும். தொழிற்சங்க செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மிகவும் பயனுள்ள சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் இந்த நிறுவனம் தற்போது தொழில் செயலக கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் அமைந்து, இயங்குகின்றது.

**பிரதான தொழிற்பாடுகள்**

- அபிவிருத்திச் செயன்முறையில் பணியாளர்களை துடிப்புடன் ஈடுபடுத்துவதற்காக அவர்களின் நலனை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை எடுத்து, உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து தொழில் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
- தொழில் கல்வி பற்றிய கருத்தரங்குகள், செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடத்துதல் அத்துடன் அதனுடன் தொடர்புபட்ட சஞ்சிகைகள், நாளேடுகள், பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல்.

- ஆராய்ச்சிகளை, ஆய்வுகளை நடத்துதல் மற்றும் நூலகம் மற்றும் தகவல் சேவைகளைத் தாபித்து, பராமரித்து, தொழில் கல்வியுடன் தொடர்புபட்டுள்ள கற்கைநெறிகளுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்.
- தொழிற்றுறை அமைதியைப் பேணுவதனை இலக்குவைத்து செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
- ஒத்த குறிக்கோள்களுடனான தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், தாபனங்கள், ஒன்றியங்கள் மற்றும் சங்கங்களுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்.
- பல்கலைக்கழகங்களினதும் மற்றும் ஒத்த நிறுவனங்களின் உதவியுடன் தொழில் கற்கைகளில் டிப்புளோமா கற்கை நெறிகள் உள்ளடங்கலான கற்கைநெறிகளை நடத்துதல் மற்றும் தேவைப்படும் போது சான்றிதழ்கள் மற்றும் டிப்புளோமாக்களை வழங்குதல்.

### 1.6.4 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

நேர்மையான தொழில் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் சிறந்த சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இலங்கையில் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான தொழில் அணியை உருவாக்கும் நோக்குடன், 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் மூலம் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் துணை நிறுவனம்மொன்றாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் தாபிக்கப்பட்டது.

நாளாந்த சுற்றாடல் அளவீட்டு கணக்கெடுப்புகள், இடர் மதிப்பீடு மற்றும் மருத்துவ பரிசோதனைகள் அதேபோன்று ஏனைய நாடுகளுடனான சர்வதேச ஒத்துழைப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றினூடாக இலங்கையில் செழிப்பான தொழில் அணியை உருவாக்குவதற்கு இந்நிறுவனம் பணியாற்றுகின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான உயர் டிப்புளோமா கற்கைநெறிகள்
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான டிப்புளோமா கற்கைநெறிகள்(ஆங்கில மொழி மூலம்).
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான டிப்புளோமா கற்கைநெறிகள்(சிங்கள மொழி மூலம்).
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான சான்றிதழ் கற்கைநெறிகள்.
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி நிறைவேற்றுத் தர அலுவலர்களுக்கான கற்கைநெறி
- பெருந்தோட்டத் துறையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான உயர் சான்றிதழ் கற்கைநெறிகள்
- கொதிகலனை இயக்குபவர்களுக்கான பயிற்சி.
- தொழிற்றுறைகள் மீதான வேலை ஆய்வு நிகழ்ச்சித்திட்டம்
- தொழில்சார்துறையில் தாதியர்களைப் பயிற்றுவித்தல்.
- மருத்துவமனைப் பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.
- அலுவலகப் பதவியினர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.
- ஆய்வுகூடங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.
- இரசாயனப் பொருட்களைப் பாதுகாப்பாகக் கையாளுதல்.
- உணவினைக் கையாள்பவர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.
- மன அழுத்த முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.

### 1.6.5 வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்

வேலைத்தலத்தில் ஏற்படுகின்ற விபத்துக்களுக்காக பணியாளர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்காக 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டிருந்தது. மூலச் சட்டம் பல தடவைகள் திருத்தப்பட்டு, இறுதியாக 2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப் பட்டிருந்தது. வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்றம், மாவட்ட நீதவானின் தத்துவம் மற்றும் நீதிவான் நீதிமன்ற தத்துவத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கக்கூடிய வகையில் 14 சுற்றுலா நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. நீதிச் சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்கடுகின்ற நீதிசார் அலுவலர்களான வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர், மேலதிக வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர்கள் மற்றும் வேலையாளர் நட்டஈட்டு உதவி ஆணையாளர்கள் ஆகிய 3 பதவிகள் உள்ளடங்கலாக, இலங்கை கணக்காளர் சேவையின் தரம் ஐ இனைச் சேர்ந்த பதவி 1 இலங்கை நிருவாக சேவையின் பதவி 1 உள்ளடங்கலாக 43 பதவிகள் இதில் காணப்படுகின்றன.

இந்த அலுவலகத்தின் பிரதான குறிக்கோள், தொழில் புரிகையில் ஏற்பட்ட காயங்களால் துன்பப்படுகின்ற, தொழிலின் தன்மை காரணமாக நோய் வாய்ப்பட்டு வருத்துகின்ற வேலையாட்களுக்கு மற்றும் வேலைத்

தலங்களில் விபத்து காரணமாக இறந்த வேலையாட்களில் தங்கியிருப்பவர்களுக்குச் செலுத்த வேண்டிய நாட்டஈட்டினைச் செலுத்து வதாகும். குற்றவியல் நடைமுறைக் கோவை, சிவில் நடைமுறைக் கோவை மற்றும் சாட்சிய கட்டளைச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகள் வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்ற நடைமுறைக்கு பொருந்தும், மேன்முறையீட்டு நடைமுறை மாவட்ட நீதிமன்றத்திற்குச் சமனானதாகும்.

**பிரதான தொழிற்பாடுகள்**

- அரசதுறை மற்றும் தனியார் துறையில் தொழில் புரிகையில் ஏற்படுகின்ற விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களுக்காக தொழில்தருநர்களிடமிருந்து நட்டஈட்டினை அறவிடுவதுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் மற்றும் வேலையாளரொருவர் இறக்கின்ற போது அவரில் தங்கியிருப் பவர்களுக்கு தொழில்தருநரிடமிருந்து நட்ட ஈட்டை அறவிடுவது தொடர்பான செயற்பாடுகள். (இறுதித் திருத்தத்தின்படி, செலுத்தக்கூடிய ஆகக்கூடிய நட்டஈடு 2,000,000 ரூபா வழங்கப்படுகின்றது).
- இறந்த பணியாளர்களில் தங்கியிருக்கின்ற பராயமடையாதவர்களது நட்ட ஈட்டை அவர்கள் முதிர்ச்சியடையும் வரையில் வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளரின் பாதுகாப்பின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பிலிட்டு அதனை நிருவகித்தல்.
- நட்டஈட்டுக் கொடுப்பனவை தொழில்தருநர்கள் செலுத்தாத சந்தர்ப்பங்களில், அத்தகைய தொழில் தருநர்களது அசையும், அசையாத சொத்துக்களைக் கைப்பற்றி, நட்டஈட்டினை அறவிடுவதற்காக அவற்றை பொது ஏலத்தில் விடுதல்.
- வேலையாளர் நட்டஈட்டுக் காப்புறுதி அனுமதிப் பத்திரத்தை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் இரத்துச் செய்தல்.
- இலங்கையில் பதிவுசெய்து கப்பலில் மற்றும் விமானத்தில் பணியாற்றுகின்ற வேலையாளர்களுக்கு இலங்கைக்கு வெளியே விபத்துக்கள் ஏற்படுகின்ற விடத்து நட்டஈடு அறவிடுவதனை மேற்கொள்ளுதல்.

## 1.6.6 தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

1966 ஆம் ஆண்டு இலங்கை ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் அங்கத்துவத்தைப் பெற்றதைத் தொடர்ந்து, தேசிய உற்பத்தித்திறன் தாபனம் (ழே) தாபிக்கப்பட்டதுடன், அதன் நோக்கத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் 1994 ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தித் திறன் செயலகம் தாபிக்கப்பட்டிருந்தது. இது, ஒரு தொகுதி உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களை, கருவிகளை மற்றும் தொழில்நுட்பத்தை பல்வேறு வகையில் அறிமுகப்படுத்தியிருந்தது. அரச, கல்வி, சேவை மற்றும் உற்பத்தி, சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் சமூகத் துறைகளை பேணுவதற்காக வருடாந்தம் நாடளாவியரீதியில் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் ஊடாக ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்தின் நிலையான ஒத்துழைப்புடனும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு, ”அறிவை மையமாகக் கொண்ட சமூகம்” உருவாக்கப் படுவதற்குத் தேவையான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**குறிக்கோள்கள்**

- பயிற்சி, முறைமை மற்றும் செயன்முறை அபிவிருத்தி மற்றும் சிறப்பான பரிமாற்றம் ஆகியவற்றினூடாக அறிவு அடிப்படையிலான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு நிறுவனம்சார் சிறப்பு மற்றும் மனித மூலதனத்தை விருத்தி செய்தல்.
- பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளின் உற்பத்தித் திறனை அளவிடுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் விருத்தி செய்தல்.
- பல்வேறு துறைகளின் வெவ்வேறு நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தேசிய உற்பத்தித் திறன் நியமங்களையும் இலக்குகளையும் தாபித்தல் மற்றும் உரிய துறைகளின் முன்னணி செயலாற்றுகை குறிகாட்டிகளை அமைத்தல்.
- உற்பத்தித்திறன் இயக்கங்களுடன் உச்ச நேரிணைப்பை உறுதிப்படுத்துவதற்காக கொள்கை சீராக்கங்கள் பற்றி ஆலோசனை வழங்கும் நோக்குடன் அரச துறையுடன் தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் முகவர் நிறுவனங்களின் புதிய கொள்கைகளை மதிப்பீடு செய்தல்.
- உற்பத்தித்திறன் மற்றும் தர மேம்பாடு மற்றும் கூட்டாண்மை நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக உற்பத்தித்திறன் உணர்வு மற்றும் படைப்பாற்றல் கலாசாரத்தை கற்பித்தல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

- உற்பத்தித்திறன் எண்ணக்கருவினூடாக சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை வலுப்படுத்துதல்
- அரச துறை நடவடிக்கைமுறைகளைச் செம்மைப்படுத்துதல்
- அரச, கல்வி, சேவைகளும் உற்பத்தித்திறனும் மற்றும் சமூகத் துறைகள் ஆகியவற்றை இலக்கு வைத்து உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்.
- உற்பத்தித்திறன் விடயங்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- உற்பத்தித்திறன் சான்றிதழ் கற்கைநெறிகள்
- உற்பத்தித்திறன் பற்றிய குறுகிய கால கற்கைநெறிகள்
- பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

- நிறுவனங்களில் உற்பத்தித்திறனை அதிகரிப்பது பற்றிய ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்துடனான பங்களிப்புடன் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
    - பயிற்சி செயலமர்வுகளை நடத்துதல்.
    - இ-கற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்
    - தொழில்நுணுக்க நிபுணத்துவ சேவைகளைப் பாதுகாப்பதன் மூலம் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
    - செயல்விளக்கக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- "எஸ் 5" சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- ஊடக மற்றும் பிரசித்த நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளுதல்.
- தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் வைபவத்தை நடத்துதல்

### 1.6.7 சிரம வாசனா நிதியம்

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டம் (2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறு) மூலம் பணியாளர்களின் நலன்புரியினை மேம்படுத்து வதற்காக தாபிக்கப்பட்ட சிரம வாசனா நிதியமானது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனமொன்றாகும். சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள 06 பரந்த குறிக்கோள்களின் கீழ், இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திலிருந்து பணியாளர்களின் முன்னேற்றத்திற்காக பல நலன்புரி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. தேசிய லொத்தர் சபையின் ஜாதிக சம்பத லொத்தரின் வருமானமே "சிரம வாசனா நிதியத்தின்" பிரதான நிதி மூலமாகும். இதற்கு மேலதிகமாக, நிதியமானது நிலையான வைப்புத் தொகைகளின் வட்டியிலிருந்து வருவாயை உருவாக்குகின்றது என்பதுடன், நிதியத்தால் ஆண்டு தோறும் திட்டமிடப்பட்ட குறிக்கோள்களுக்கு ஏற்ப வேலையாளர்களின் நலனுக்காக நாடளாவியரீதியில் பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

**நிதியத்தின் குறிக்கோள்கள்**

- பணியாளர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களின் நலன்புரியை மேம்படுத்துதல்.
- பணியாளர்கள் பணிபுரிந்த நிறுவனங்கள் முன்னறிவித்தலின்றி மூடப்படுகின்றபோது அவர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.
- அவசர காலங்களில் பணியாளர்களுக்கு மருத்துவம் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.
- பணியாளர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படும்போது அவர்களுக்கு தற்காலிக உதவிகளை வழங்குதல்.
- பணியாளர்களுக்கு அல்லது அவர்களில் தங்கியிருப்பவர்களுக்கு, இடர் காலங்களில் நிதி மற்றும் ஏனைய அனுகூலங்களை வழங்குதல்.
- பணியாளர் நலனுக்காக சிறந்த சேவை செய்த நபர்களுக்கு விருதுகள் வழங்குதல்.
- தொழில் ஆணையாளர் அதிபதி, தொழில் நியாயசபை, நடுவர் அல்லது கைத்தொழில் நீதிமன்றம் அல்லது பிற சட்ட நீதிமன்றத்தில் ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் விதிகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அல்லது நிலுவையில் இருக்கும் போது பணியாளரின் பணிநீக்கம் அல்லது தொழிற்றுறைப் பிணக்கு தொடர்பான நடவடிக்கைகள் காணப்படுகின்றவிடத்து பணியாளர்களுக்கு சட்ட உதவியைப் பெறுவதற்கு நிதி நிவாரணம் வழங்குதல்.

### 1.6.8 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது, இது 1994 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டம் மற்றும் 56 ஆம் இலக்க சட்டத்தால் வேலைக்காக இடம்பெயர்கின்ற இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு முன்னுரிமை அளிக்கின்ற 18 விசேட நோக்கங்களுடன் திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பிரதான நியதிச்சட்ட நிறுவனமாகும். பணியகத்தின் முக்கிய பொறுப்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையை நிருவகித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல், புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் வலுவூட்டல் மற்றும் இலங்கையர்களுக்கு இலங்கைக்கு வெளியே தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துதல் மற்றும் விருத்தி செய்தலும் ஆகும்.

பத்தரமுல்லை பிரதான அலுவலக வளாகத்தில் தாபிக்கப்பட்டுள்ள 31 பிரதான செயற்பாட்டு பிரிவுகளுக்கு மேலதிகமாக பணியகமானது 09 மாகாண புலம்பெயர்ந்தோர் மூலவள நிலையங்கள், 07 மாவட்ட அலுவலகங்கள், 02 பயிற்சி நிலையங்கள் மற்றும் 03 விமான நிலைய அலகுகள் ஊடாக பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குகின்றது. 1.117 ஊழியர்களைக் கொண்டுள்ள இந்நிறுவனம் இலங்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை வலுப்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகின்றது. இலங்கையில் வேலைவாய்ப்புக்காக குடிபெயர்தல் தொடர்பான தேசிய கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டமானது பின்வரும் 04 அடிப்படை நோக்கங்களை வலியுறுத்தியுள்ளதுடன், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வருடாந்த செயல் திட்டம் இந்த நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

1. சீரிய மற்றும் உற்பத்தித் திறன் மிக்க வேலைவாய்ப்பினை மேம்படுத்துவதற்கு தொழில் புலம்பெயர்வினைக் கட்டுப்படுத்துதல்.
2. புலம்பெயர் வேலையாளர்களின் உரிமைகளையும், அவர்களின் குடும்பங்களின் நலன்புரியினையும் பாதுகாப்பதனையும், காப்பதனையும் உறுதிப்படுத்துதல்.
3. உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதாரங்களில் தேர்ச்சியுள்ள மற்றும் பகுதியளவிலான தேர்ச்சியுள்ள புலம்பெயர் வேலையாளர்களுக்கான வேலை வாய்ப்புகளை மேம்படுத்துதல்.
4. தொழில் புலம்பெயர்ச்சியின் நன்மைகளையும், தேசிய அபிவிருத்தியுடன் அதற்குள்ள தொடர்புகளையும் செம்மைப்படுத்துதல்.

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட முன்னுரிமைகள் (பிரதான தொழிற்பாடுகள்)**

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களை நடத்துவதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்க்கும் நபர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- இலங்கை புலம்பெயர் வேலையாளர்களை பணியகத்தில் பதிவு செய்தல் ∴ வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு இலங்கையர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்.
- புலம்பெயர் வேலையாளர்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்களால் மேற்கொள்ளப் பட்ட முறைப்பாடுகளைத் தீர்த்தல்.
- புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்குதல்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறைக்கு பொருந்தும் சட்டங்களை அமுல்படுத்துதல்.
- இலங்கையர்களுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை மேம்படுத்துதல்.

## 1.6.9 வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

அரசுக்குச் சொந்தமான ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையமாக விளங்கும் வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் 1996 ஒக்டோபர் மாதம் தாபிக்கப்பட்டது. வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் ஒழுங்குபடுத்தல் அமைப்பாக விளங்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நிருவாக முகவராக இது தொழிற்படுகின்றது.

**குறிக்கோள்கள்**

- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமானது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் அமைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப தொழிற்படுமாறு கோரப்படுகின்றது. 1985ஆம் ஆண்டின் 1985 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த விதிமுறைகள், நிறுவனத்தின் செயல்பாடுகளை நிருவகிக்கின்றன. இதற்குமேலதிகமாக, நிறுவனம் வேறு ஏதேனும் தொடர்புடைய சட்டரீதியான சட்டங்கள் அல்லது சட்ட கட்டமைப்புகளுக்கு இணங்குதலும் வேண்டும்.
- அனைத்து தொழில் வகைப்பாடுகளிலும் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள உள்நாட்டு மற்றும் உள்நாட்டு அல்லாத பதவிகளுக்கு தொழில்சார் நிபுணர்கள், நிருவாகிகள், தொழில்நுட்பவியலாளர்கள், தொழில்துறை துப்புரவேற்பாட்டு தொழிலாளர்கள், அதேபோல் தேர்ச்சியுள்ள, பகுதி தேர்ச்சியுள்ள அல்லது தேர்ச்சியற்ற வேலையாட்களுக்கு தகைமைகளை உறுதிப்படுத்துவதன் பேரில் தொழில்களை வழங்குதல்.
- மனிதவள வழங்கல் வர்த்தகம், காப்புறுதி, வர்த்தகம் அல்லது தொழில்துறையில் உள்ள தனிநபர்களுடனும், அதேபோல் அத்தகைய சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் பிற நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்துதல்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பின் தேவைகளை பூர்த்தி செய்ய தொழில் அணியின் திறன்களை மேம்படுத்துவதற்கான வசதிகளை உருவாக்குதலும், திறனை விருத்தி மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை நிருவகித்தல்.